Hyundai Company இதுவரை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னிலையில் போடப்பட்ட ஒப்பந்தத்தைக்கூட நிறைவேற்ற முன்வரவில்லை. NOKIA கம்பெனியில் வேலை பார்த்த ஒரு இளம் பெண் தொழிலாளி விபத்தில் பலியாகி இருக்கிறார். இன்றைக்கு வளர்ந்து வரும் சூழ்நிலையில் இதுபோன்ற பிரச்சினைகளை நாம் சந்திக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, மாநில அரசு தொழிலாளர்கள் சங்கத்திற்குரிய ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முன்வருமா, வராதா? தொழிலாளர் நலன் குறித்து, குறிப்பாக, பன்னாட்டு நிறுவனங்களில் பணி செய்யக்கூடிய தமிழ் தொழிலாளர்கள் நிலை குறித்து என்ன முடிவு, கொள்கை ரீதியாக எடுத்திருக்கிறார்கள் என்பது குறித்து அறிவதற்கு நான் விரும்புகின்றேன். இது குறித்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

(ஈ) சிவகங்கை மாவட்டம், விவசாயிகள் பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தில் சேர்ந்தவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்காமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன். *(குறுக்கீடுகள்)* மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் விவசாயிகள் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் அதிக அளவில் பங்கேற்கிறார்கள். ஆனால், அந்தத் திட்டத்தில் கணக்கீட்டு முறை என்பது அடிப்படையில் தவறாக இருக்கிற காரணத்தினால், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு முறையான இழப்பீட்டுத் தொகை கிடைக்காத ஒரு நிலை நீடித்துக்கொண்டிருக்கின்றது. இந்த ஆண்டு சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில், மரவமங்கலம், நாட்டரசன்கோட்டை, இளையான்குடி போன்ற பகுதிகளில் மகசூல் என்பது கடுமையாக பாதிக்கப்பட்டு அரசாங்கத்தினுடைய புள்ளிவிவரத்தின் அடிப்படையிலே காளையார்கோவில் பகுதியில் 377 கிலோதான் ஒரு ஏக்கருக்கு சராசரியாக மகசூல் கிடைத்திருக்கிறது. அதேபோல் மரவமங்கலத்திலும் சுமார் 300 கிலோதான் மகசூல் கிடைத்திருக்கிறது. இப்படியிருக்கிற சூழ்நிலையில் அந்தப் பகுதிகளுக்கு அந்த ஒப்பீட்டுக் கணக்கீட்டு முறை தவறாக இருக்கிற காரணத்தினால், அங்கே காப்பீட்டுத் தொகை கிடைக்காமல்,

2010 நவம்பர் 11] [திரு. சு. குணசேகரன்]

அதே சமயத்தில் மற்ற பகுதிகளில் சராசரியாக இந்த ஆண்டில் 2,000 கிலோ மகசூல் கிடைத்த பகுதிக்கு 20 சதவிகிதம் இழப்பீட்டுத் தொகை கிடைத்திருக்கிறது. எனவே, கூடுதலாக விளைந்திருக்கிற பகுதிகளுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைத்தும், மகசூலே இல்லாத பகுதிகளுக்கு இழப்பீட்டுத் தொகை இல்லாத நிலைக்குக் காரணம், அவர்கள் அந்த 3 ஆண்டுகள் என்று கணக்கிடுகிற அந்த ஒப்பீட்டு மகசூல் ஆகும். இது ஆண்டுக்காண்டு வித்தியாசப்படுவதும், விளையாத ஆண்டில் அதைச் சேர்க்கிற காரணத்தால்தான் இப்படிப்பட்ட ஒரு தவறு ஏற்படுகிறது. எனவே, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இப்போதே இதில் தலையிட்டு இந்தக் கணக்கீட்டு முறையில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும். அதிகபட்சமாக ஒவ்வொரு ஃபிர்காக்களிலும் எந்த அளவுக்கு அதிகபட்சமான மகசூல் கடந்த ஆண்டுகளில் கிடைத்திருக்கிறதோ அதை ஒப்பீட்டு அளவீடாக வைத்துக்கொண்டு இந்த ஆண்டு விளைந்த சராசரி மகசூலைக் கணக்கிட்டால் கண்டிப்பாக இந்தப் பகுதிகளுக்கு இழப்பீடு கிடைக்கும். எனவே, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த விஷயத்தில் தலையிட்டு மகசூல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு முறையான இழப்பீடு கிடைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

இன்னொரு வேண்டுகோள்: சிவகங்கை தலைநகரத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தின்கீழ், குழாய்கள் அமைக்கிற பணி நிறைவு பெற்றிருக்கிறது. ஆனாலும், சாலைகளைச் சீர் செய்கிற பணியை இன்னும் தொடங்காத காரணத்தால், நிதியொதுக்கீடு செய்யப்படாத காரணத்தால், மழைக்காலங்களில் மிகுந்த பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குணசேகரன், debate-ல் பேசுகிற மாதிரி பேசுவதற்கு வாய்ப்பு கிடையாது, உட்காருங்கள். (குறுக்கீடு) முடியாது. இனிமேல் அவ்வளவுதான். (குறுக்கீடு)

(உ) உறுப்பினர்கள் கோரும் தகவல் குறித்து அமைச்சர்களுக்கு முன்கூட்டியே தெரிவித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.